# அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின்

# 2017-2018-ஆம் ஆண்டிற்கான தமிழ்த்துறை ஆண்டறிக்கை

- மாணவர்களின் நலனுக்காக ஜுன் முதல் மே மாதம் வரையிலான பாடவேளைநாள் திட்டம் எங்கள் பேராசிரியர்களால் எழுதப்படுகிறது.
- அலகுத்தேர்வு மாதம் ஒரு முறை நடத்தப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றது.
- சுழற்சித்தேர்வு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட்டு, அதில் மதிப்பெண்கள் குறைவான மாணவர்களைப் படிக்க வைத்து மீண்டும் மறுதேர்வு நடத்தப்படுகின்றது.
- ஒரு பருவத்திற்கு இரண்டு ஒப்படைப்புகள் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு மதிப்பெண் வழங்கப்படுகின்றது.
- மாதிரித்தேர்வு நடத்தி பருவத்தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்கிறோம். மாணவர்கள் பருவத்தேர்வில் எளிதில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொதுத்தமிழ் கேள்வி-பதில் வினாவங்கி தயார் செய்து மாணவர்களுக்கு வழங்குகிறோம்.
- 2017-2018-ஆம் ஆண்டிற்கான பருவத்தேர்வில் வெற்றிபெற்று முதல் இரண்டு இடங்களைப்பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்குவிக்கிறோம். அத்துடன் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊக்கமளிக்கின்றோம்.
- குறைவான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மதியவகுப்புகள் நடத்தி பயிற்சியளித்து வருகின்றோம்.
- விடுதிமாணவர்களுக்குப் போட்டித்தேர்வுகளில் கலந்துகொள்வதன் அவசியத்தையும், பயிற்சியையும் வழங்கியுள்ளோம்.

## வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம்

- அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் 2011ஆம் ஆண்டு தொடங்கி, 2018 வரை சிறப்புடன் நடைபெற்று வருகிறது.
- எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் முத்தமிழ் மன்றம் இவ்வாண்டிலும் பல விழாக்களை நடத்தியிருக்கிறது. வீரமாமுனிவா் முத்தமிழ் மன்றத்தின் சார்பாக இயல், இசை, நாடகத் தமிழ்ப்போட்டிகள் நடத்தப்பட்டன.

- இயற்றமிழ் போட்டிகளாகப் பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியம், சிறுகதைப்போட்டிகளும் நடத்தப்பட்டன.

- இசைத்தமிழ்ப்போட்டிகளாக தமிழிசை, நாட்டுப்புறப்பாடல் போட்டிகளும் நடத்தப்பட்டன. இசை ஆர்வம் மிகுந்த மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் முனைவா் கி.தினேஸ்குமாா் அவர்களால் இசைப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. நாடகத்தமிழ்ப்போட்டிகளும் நடத்தப்பட்டன.

- 2017-2018ஆம் ஆண்டிற்கான வீரமாமுனிவர் முத்தமிழ் மன்ற தொடக்கவிழா 29.08.2017 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் இயல்,இசை,நாடகம் ஆகிய முத்தமிழையும் மாணவர்கள் நிகழ்த்தினர். கவிஞரும், திரைப்பட பாடலாசிரியருமான **திரு.தனிக்கொடி** அவர்கள் ‘**இலக்கியமும் திரையிசைப்பாடல்களும்**’ சிறப்புரையாற்றினார்.



- 12.12.2017 அன்று எழுத்தாளரும், *இந்தியா டுடே* இதழின் துணைஆசிரியரும், எழுத்தாளருமான **கவின்மலர்** அவர்களின் படைப்புகளான ‘**அப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?**’ ‘**கலைஞர்கள்-படைப்பாளிகள்-சாட்சியங்கள்**’ என்ற இருநூல்களின் அறிமுகமும் விமர்சனமும் நிகழ்த்தப்பெற்றது.



- 21.02.2018 அன்று கலைஇலக்கியப்பெருமன்றம் மற்றும் வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றமும் இணைந்து **‘உலகத்தாய்மொழி நாள்’** கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இலக்கியத்துறைப் பேராசிரியரான **இரா.காமராசு** அவர்களும், கவிஞர் **வல்லம் தாஜ்பால்** அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.




- **வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம்** சார்பாக நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும், பங்குகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும், பரிசாகப் புத்தகங்களையும் வழங்கிச் சிறப்பித்துள்ளோம்.




- தமிழ்த்துறையும், காட்சித்தொடர்பியல்துறையும் இணைந்து **‘தமிழ்த்திரைப்படங்களில் இலக்கிய உள்ளீடும் காட்சிவெளியீடும்’** என்னும் தலைப்பில் பன்னாட்டுக்கருத்தரங்கம் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

## முதல் மதிப்பெண்கள் (கலை)

முதலாம் ஆண்டு

முதலிடம் - அ.ஆர்த்தி பிரியங்கா (91) - **1ST B.COM – A**

இரண்டாமிடம் - தெ.அபிதா (90) **- 1ST B.COM (CA) – A**

*இரண்டாம் ஆண்டு*

*முதலிடம்* - நா.சோபனா (92) - **2nd B.COM (CA) – B**

*இரண்டாமிடம்* - வீ.மார்ஷல் அமர்நாத் (89) **- 2nd B.B.A**

பி.மார்கிரேட் நான்சி (89) - **2nd B.B.A**

## 2017-2018(நவம்பர்)

## தமிழ் முதல் மதிப்பெண்கள் (அறிவியல்)

### முதலாம் ஆண்டு

முதலிடம் - கு.அட்சயா ஆதவி (92) - **1st Maths**

- க. ராஜாத்தி (92) - **1st BCA - B**

இரண்டாமிடம் - ச.மஹாலட்சுமி (90) **– 1st BCA - A**

### இரண்டாம் ஆண்டு

முதலிடம் - பா.மதுமிதா (87) - **2nd Maths**

இரண்டாமிடம் - வே.சுவேதா (85) **– 2nd IT**

## தேர்ச்சி விகிதம்

பகுதி 1 தமிழ் **16LCT1**

பருவத்தேர்வு முதலாம் ஆண்டு

தேர்ச்சி விகிதம் -98 **%**

பகுதி 1 தமிழ் **16LCT3**

பருவத்தேர்வு இரண்டாம் ஆண்டு

தேர்ச்சி விகிதம் - 99**%**